Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.189/2020 Date: 01.08.2025
Deposition of witness for prosecution: PW 3 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | வளனரசு | Village | இராயப்பன்பட்டி |
| Father/ Husband Name | வேதமுத்து | Taluk | உத்தமபாளையம் |
| Age | 51 /2025 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 01.08.2025 TIME 12.15 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

அ.சா.1, 2 எனது உடன் பிறந்த சகோதரி மற்றும் அவரது கணவர் ஆவார்கள். ஆஜர் எதிரியை தெரியும், எனக்கு மச்சான் முறை ஆவார். கடந்த 04.07.2018-ம் தேதி இராயப்பன்பட்டிக்கு அருகே உள்ள லூர்து நகரில் எனது அக்கா வீட்டிற்கு அருகே சென்று நானும், சுரேந்திரன் என்பவரும் மாலை 07.30- 08.00 மணியளவில் பேசிக்கொண்டிருந்த போது, எனது அக்கா வீட்டில் இருந்து சத்தம் கேட்டது, என்னவென்று நாங்கள் போய் பார்த்த போது ஆஜர் எதிரி எனது அக்காவை முடியை பிடித்து இழுத்து போஸ்டில் இடித்தார். அதனை தடுக்க வந்த எனது மச்சான் அந்தோணிசாமியை எதிரி கட்டையை வைத்து பின்தலையில் அடித்தார். எனது அக்கா குடும்பத்தாருக்கும், எதிரிக்கும் அவர்களது வீட்டின் அருகே உள்ள பொது பாதை சம்மந்தமாக இருந்த பிரச்சனையால் எதிரி அடித்தார். நான், அசா.1, அசா.2 ஆகியோர் இராயப்பன்பட்டி காவல்நிலையம் சென்றோம். புகார் கொடுத்துவிட்டு, அதன்பின்பு உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். மேற்படி சம்பவத்தில் எனது அக்காவுக்கு காதில் அணிந்திருந்த கம்மல் உடைந்துவிட்டது. எனது மச்சானுக்கு பின்தலையில் இரத்த காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை எனது அக்கா தான் கொடுத்தார். அந்த புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 05.07.2018-ம் தேதி அன்று மதியம் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் எதிரி எனது அக்கா தலைமுடியை பிடித்து போஸ்டில் (EB-Post) மோதினார் என சொல்லியுள்ளேன். நானும் மருத்துவமனைக்கு சென்றேன், மருத்துவரை பார்த்த நேரம் சுமார் இரவு 09.30 மணி இருக்கும். எனது மச்சான் உடுத்திருந்த உடையில் இரத்தம் படிந்திருந்தது என்றால் சரிதான். புகார் கொடுத்து அரை மணிநேரம் கழித்து சம்பவ இடத்தில் போலிசார் பார்வையிட்டார்கள். கட்டையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி தெரியாது. சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் சுமார் 4-5 நபர்கள் இருந்தார்கள். புகார்கொடுத்த நபர் எனது அக்கா

என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/ திரு. P. காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.